இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,169, FEBRUARY 8, 1907.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALE.

### காணி விற்பனவு.

No. 1,101, E. P.

கொலோனியல் சக்கிரத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1907 ம் ஷ மாசிம் 2 ந் உ.

1907 ம் ஆண்டு பங்குனிமாதம் 22 ந் தேதியாகிய வெள்ளிக்கிழமை, முற்பகல் கிழக்கு மாகாணத்து கவர்ண்மேந்து ஏசென்டவர்கள் தனது ஆபிசில் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், ஏலத்திற்கூறி விற்பார்.

காணித்துண்டுகள், கிழக்கு மாகாணத்து மட்டக்களப்பு டிஸ்திறிக்கிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 3,650. கோறளைப்பற்று.

உரித்தாளி—முடிக்குரிய.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. ரூ. பே. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 93151 | வாழைச்சேனை | இ. கறுவல் | தென்னைக்கேற்றகாடு | 8 0 10 | 15 |
| | | படம் 3,654. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 93156 | புனானை | த. கதிராமத்தம்பி | புகையிலைச்செய்கைக் கேற்றபூமி | 3 1 30 | 15 |
| | | படம் 3,689. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 93285 | கும்புறுமூலை | சி. கணபதிப்பிள்ளை | தலைக்காடு | 10 3 28 | 15 |
| | | படம் 799. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 9687 | முருவோடை | பொ. த. அகமதுலெவ்வை | வெட்டை பூமி | 8 0 13 | 15 |
| | | படம் 3,655. ஏறாவூர்ப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 93157 | சித்தாண்டிகுடி | மு. சுப்பிரமணியம் | வயல் | 9 2 10 | 15 |
| | | படம் 2,491. எருவில்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 76646 | மகிளூர் | ச. கதிரமலைப்போடி | வேளாண்மைக்கேற்றபூமி | 2 3 10 | 15 |
| | | படம் 3,349. மண்முனைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 90409 | இலுப்பையடிச் சேனை | மு. சமபுறுதன் | சாட்டுப்பூமி | 10 3 20 | 15 |
| 90410 | டை | பொதுவிற்பனவு | டை | 4 2 36 | 15 |
| | | படம் 3,362. உரித்தாளி—கூடிப்பிடித்தது. | | | |
| 90438 | தெவிலாமுனை | ம. ஆ. உதுமாலெவ்வை | வேளாண்மைப்பூமி | 3 1 16 | 15 |
| | | படம் 3,447. உரித்தாளி—கூடிப்பிடித்தது. | | | |
| 92131 | சோதையன் குளம் | வெ. பாலிப்போடி | டை | 6 0 0 | 15 |
| | | படம் 3,597. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 92732 | சொருவாமுனை | போ. தம்பி கண்டு | தோட்டச்செய்கைக்கேற்றபூமி | 0 1 37 | 30 |
| 92734 | டை | ப. கந்தப்பன் | டை | 5 0 18 | 30 |
| | | படம் 3,598. உரித்தாளி—முடிக்குரியது. | | | |
| 92737 | ஆற்றுச்சேனை | ச. கணபதி | வேளாண்மைக்கேற்றபூமி | 4 2 15 | 15 |
| | | படம் 3,569. உரித்தாளி—முடிக்குரியது. | | | |
| 92639 | மாவடிமுன்மாரி | ச. க. குமாரப்போடி | வேளாண்மைப்பூமி | 6 3 28 | 15 |
| | | படம் 3,521. உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 92455 | அமிர்தகளி | அ. இனி | தென்னந்தோட்டம் | 0 2 14 | 20 |
| | | படம் 3,285. போரதீவுப்பற்று. உரித்தாளி—முடிக்குரியது. | | | |
| 89801 | வெல்லாவெளி | வே. காளி | வேளாண்மைக்கேற்றகாடு | 4 3 0 | 15 |
| 89802 | டை | டை | டை | 1 3 27 | 15 |
| 89803 | டை | ச. மாணிக்கப்போடி | தோட்டப்பூமி | 2 0 15 | 15 |
| | | படம் 3,439. உரித்தாளி—முடிக்குரியது. | | | |
| 92096 | போரதீவு | பொதுவிற்பனவு | காடு | 9 3 4 | 15 |

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. பே. | தீர்ப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரு. |
|---|---|---|---|---|---|
| | | உரித்தாளி—கூட்டிப்பிடித்தது. | | | |
| 92098 | போரதிவு | வ. கணபதி | வேளாண்மைப்பூமி | 6 2 28 | 15 |
| 92100 | ஷை | 87,770 நொம்பர் கண்டத்தின் சொந்தக்காரன் | ஷை | 1 3 25 | 15 |
| | | படம் 1,558. சம்மாந்துறைப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| 4209 | சம்மாந்துறை | பொதுவிற்பனது | காட்டுப்பூமி | 3 1 39 | 15 |
| 4210 | ஷை | ஷை | ஷை | 5 0 10 | 15 |
| 4221 | ஷை | ஷை | ஷை | 5 3 11 | 15 |
| 4222 | ஷை | ஷை | ஷை | 6 3 16 | 15 |
| 4226 | ஷை | ஷை | ஷை | 3 3 12 | 15 |
| | | படம் 2,097. போரதிவுப்பற்று. உரித்தாளி—முடிக்குரிய. | | | |
| W 52 | வெல்லவெளி | பொதுவிற்பனவு | வேளாண்மைக்கேற்றது | 10 3 25 | 15 |

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விளம்பரங்களையும் விற்பனவின் கொந்திசுகளைப்பற்றியும் மட்டக்களப்பு அரசாட்சி ஏசன்றுத்துரையவர்களிடம் விஞவி அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்கள் கட்டளைப்படி,

ஏ. எம். ஆஸ்மூர்,
இராசாங்க விதை.

---

# LAND ACQUISITION NOTICE.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

[Panditbaporuwa, Matara District.]

1876 ம் ஆம்-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தெய்யந்தரையில் கல்விசாலைக்கு அடுக்கவோர் தோட்டம் உண்டுபண்ணுகிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அத்தாவது :—

பிரதமபடத்து இலக்கம் 83. குறிச்சி—பண்டித்தபொறுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 2 A | கோங்காவத்தேஹேன | வெண்பூமி | டப்லிவ். டினாயக்க வலப்புஹாமியும் இன்னும் பெயர்களும் | 0 0 25 |
| 3 A | ஷை | தோட்டம் | ஷை | 0 3 9 |
| 4 A | ஷை | வெண்பூமி | ஷை | 0 0 6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆம்-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1907 ம் ஆம் பங்குனிமாசம் 15 ந் தேதியிலன்று 1 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தந்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1907 ம் ஆம் ஜனவரிமீ 29 ந் தேதி.

ஜி. டக்ஸன்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

[Kiripitiya, Matara District.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1907 ம் ஆம் பெப்ரவரி (மாசி)மீ 8 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், மாத்துறை உதவி அரசாட்சி ஏஜென்ற் அவர்களிடம் மாத்துறைக் கச்சேரியில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய உதவி அரசாட்சி ஏஜென்ற் அவர்கள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ் நிலச்சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

மாத்துறை கச்சேரி,
1906 ம் ஆ டிசம்பர்மீ 15 ந் தேதி.

ஜி. டக்சன்,
உதவி அரசாட்சி ஏஜென்ற்.

*சுட்டிய காணிகளின் விவரம்.*

*தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கு மொறவக்கோறளையைச்சேர்ந்த கிரிபத்திய என்னும் கிராமத்திலுள்ள கீழ்த்தட்ட வளைக்கப்படும் *உறுதிப்படுத்திய படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—*

I.

பிரதம படம் 3.

| காணித்துண்டு. | காணியின் பேர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| D 5 ... | கந்தேதெனிய ... ... ... | 0 1 0 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும்-முடிக்குரிய ஆதனமெனப் பிரசித்தப்படுத்திய கொடகேனே அல்லது கந்தே தெனியகேனே ; தெற்கு-முடிக்குரிய ஆதனமெனப் பிரசித்தப்படுத்திய கந்தேதெனியேமெதகொட; மேற்கு-முடிக்குரிய ஆதனமெனப் பிரசித்தப்படுத்திய கொடகேனே அல்லது கந்தேதெனியகேனே.

II.

பிரதம படம் 3.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| O 4 ... | வற்றகேனே ... ... ... | 4 3 36 |

எல்லைகளாவன: வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும்-முடிக்குரிய ஆதனமெனப் பிரசித்தப்படுத்திய வற்றகேனே.

* இங்கிலீசின் IV.ம் பாகம் 80 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்க.

2,642

---

[Horagala, Matara District.]

இதன்கீழ் குறிக்கப்பட்டிருக்கிற காணிகளுக்கு ஏதும் உரித்துச்சொல்லுகிறவர்கள் ஆருமிருப்பாராகில், அவர்கள், 1907 ம் ஆண்டு மாசிமீ 8 ந் தேதி துவக்கம் மூன்று மாதத்தவணைக்குள் மாத்துறை கச்சேரியில் மாத்துறை டிஸ்திறிக்கின் உதவி ஏஜண்ட்துரை முகதாவில் வெளிப்பட்டு மேற்சொல்லிய காணிகளுக்கல்லது அதிலொரு பாகத்துக்கு விருக்கும் உரித்தை சொல்லிநிக்காவிட்டால், மேல்சொல்லிய உதவி ஏஜண்ட்துரை அவர்களால் அவர்களுக்கு 1897, 1899, 1900, 1903 ம் ஆண்டுகளின் வெண்காணி கட்டளைச்சட்டத்தால் கொடுத்திருக்கும் அதிகாரத்தின்பிரகாரம் உரித்துச்சொல்லாமல்விட்ட மேல்சொல்லிய காணிகளை அரசாட்சியாரின் காணிகளென்று அவர்களின் கையொப்பமுள்ள எழுத்தால் கூறப்படுமென்பதை இதனால் அறிந்துகொள்ளவேண்டும்.

ஜீ. கூக்சன்,
அரசாட்சி உதவி ஏஜெண்ட்.

மாத்துறை கச்சேரி, 1907 ம் ஹு தைமீ 23 ந் உ

காணிகளின் விபரம்.

தென்மாகாணம் மாத்துறை டிஸ்திறிக்கின் மொறவக்கோறளை பள்ளேபத்துவையில் கொறகல வென்னும் ஊரிலிருக்கும் இதில் அணைத்திருக்கும் *நிச்சய பிளானில் காண்கும் இதின்கீழ் காண்கும் காணிப்பிரதிகள், அதாவது:—

I.

பிரதம பிளான் 16.

| காணிப்பிரதி. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 5 ... | மகதெனிய ... ... ... | 0 0 10 |

இதின் எல்லை: வடக்கும் மேற்கும்-கமகே அந்திரிஸ் உரித்துச்சொல்கிற உருதுவனெகேன ; கிழக்கு-155,803 பகடெனிய பிகுறையில் காண்கும் காணி ; தெற்கு-கமகே அந்திரிஸ் உரித்துச்சொல்கிற அகலதலவத்த.

II.

பிரதம பிளான் 16.

| காணிப்பிரதி. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 25 ... | கமகேவத்ததெனிய ... ... ... | 4 0 5 |

இதினெல்லை : வடக்கு-கமகே ஐயன்காமியும் மற்றவர்களும் உரித்துச்சொல்கிற கமகேவத்த ; கிழக்கு-கமகே ஐயன்காமியும் மற்றவர்களும் உரித்துச்சொல்கிற கமகேவத்தயும், கமகே ஐயன்காமியும் மற்றவர்களும் கமகேவத்த தெனிய முல்லக்கடவத்த வென்ற காணியிலோர் பகுதியெங்கிற (வெல்விதானே ஆராட்சியாருக்குடையதென்று சொல்கிற); தெற்கு-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய கல்வின்னேகேன ; மேற்கு-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய இல்லுப்தன்னேகேன.

III.

பிரதம பிளான் 16.

| காணிப்பிரதி. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 47 ... | லமத்காவில ... ... ... | 4 0 12 |

இதினெல்லை: வடக்கும் கிழக்கும் தெற்கும் மேற்கும்-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய லெமதகாவிலகேன.

IV.

பிரதம பிளான் 16.

| காணிப் பிரதி. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 48 ... | மன்தன்விலதெனிய ... ... ... | 5 1 27 |

இதினெல்லை : வடக்கு-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய மன்தன்தவிலஹுகலாவையும் கேனேயும் கிழக்கு-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய உடகந்தேகேன ; தெற்கு-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய லந்தவிலகேன ; மேற்கு-அரசாட்சியாருக்குடையதாக பிரசித்தப்படுத்திய லமதவிலகேனேயும் மந்தந்தவிலதொலயும்.

* இங்கிலீசின் IV. ம் பாகம் 81—83 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

2,643

[Tender for building Salt Stores, Puttalam.]

புத்தளம் உப்புக்குதங்களைக் கட்டுதற்கு கேள்விப் பத்திர அறிவித்தல்.

1907 ம் ஆண்டு மார்ச் 21 ந் தேதி, வியாழக்கிழமை, பிற்பகல் 1 மணிக்கு புத்தளம் தென் உப்பு டிப்போவில் பின் சொல்லப்படும் கட்டடங்களைக் கட்டுதற்காக மேலுறையில் "புத்தளம் உப்பு டிப்போவில் குதங்களை கட்டுதற்காக வென்று" எழுதி முத்திரிக்கப்படும் கேள்விப்பத்திரங்களை புத்தளம் உதவி அரசாட்சி ஏஜன்றுத்துரை அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இரண்டு அறைகள் அடங்கிய ஓடுகளால் கட்டப்பட்ட ஒரு கட்டடமும் ஒவ்வொரு அறைகள் 85 அடி நீளமும் 20 அடி அகலமுள்ளதாகவும் அவ்விரண்டுக்கு மிடையில் ஒரு சிறுமடுவமும் 18 அடி நீளமும் 20 அடி விசாலங்கொண்டதாகவும் இருக்கவேண்டியது.

80 அடி நீளமும் 20 அடி விசாலமுள்ள ஒரு கட்டடமும் தொங்கலில் 18 அடி நீளமும் 20 அடி விசாலமுள்ள ஒரு மடுவமும் மத்துடனிருக்கவேண்டியது.

75 அடி நீளமும் 20 அடி விசாலமுங்கொண்ட இரண்டு கட்டிடங்களும் 18 அடி நீளமும் 20 அடி விசாலமுமுள்ள ஒரு சிறு மடுவமும் வேண்டியது.

1. ஓடுகளால் கட்டப்படும் சுவர்களுக்கு ஒவ்வொரு அடிக்குள்ளாக பிளந்த தம்பன்று கம்புகள் பாவிக்கவேண்டியது.

2. மல்லங்கள், வளைகள், தூண்கள், கப்புகள், கவர்க்கப்புகள் தகுதியான தம்மன்றுவில் போடவேண்டியது.

3. பூட்டுகளும் வரிச்சுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதமான மரத்திலிருக்கவேண்டியது. ஓடுகளுக்கு மேலும் ஊாய்பூட்டுகள் 18 இஞ்சிக்கிடையில் போடவேண்டியது.

4. கூரையில் இவ்விரண்டு சன்னல்கள் ஒவ்வொரு அறைக்கும் வைத்திருக்கவேண்டியது.

5. கிடங்குகள் பள்ளங்கள் எல்லாம் மூடிய பிற்பாடு சுற்றியிருக்கும் நிலத்தின் மட்டத்திலிருந்து ஒரு அடிக்குத் தரையை உயர்த்தி நல்லாய் அடித்து மட்டப்படுத்தி பின் களியைப்பரப்பி திரும்பவும் நல்லாய் அடித்து மட்டப்படுத்தவும் வேண்டியது.

6. கட்டிடத்தின் உள்புறம் ஏருசா மட்டையினால் கட்டவேண்டியது.

7. தகுதியான முதிரையினால் 8 அடி நீளம் 4 அடி அகலமுள்ள கதவுகளும் நிலைகளும் போடவேண்டியது.

8. இவ்வொப்பந்தத்துக்கு கையொப்பமிட்ட அறு கிழமைக்குள்ளாக இரண்டு ஒற்றுக்காம்டறை வீடுகளும் மூன்று மாசத்துக்குள் மற்ற இரண்டும் இவ்விரண்டு குதங்கள் உள்ள கட்டிடங்களும் முடிக்கவேண்டியது.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது.

(a) கேள்விக்காரர் 1907 ம் ஆண்டு மாசிமாதம் 21 ந் தேதிக்கு முன்பதாக புத்தளம் கச்சேரியில் ரூபா 10 கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கொவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபொருந்த களைக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும், அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி யேசன்றுத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமையம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொந்திராக அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் கேள்விக்காரர் தங்களுடைய பேரையும் தாங்களிருக்கும் இடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விசாரி யறிந்துகொள்ளலாம்.

ஆர். என். தேவின்,
உதவி ஏசன்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1907 ம் ஸு தைமீ 31 ந் தேதி.

[Supreme Court Criminal Sessions, Batticaloa.]

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: மட்டக்களப்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மட்டக்களப்பு டிஸ்திறிக்டைச்சேர்ந்த குற்றவியல் வழக்குவிசாரணை, 1907 ம் ஆண்டு மாசிமாதம் 25 ந் தேதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

மட்டக்களப்பு பிஸ்கால் கந்தோர், 1907 ம் ஸு மாசிமீ 2 ந் உ.

தீ. சின்னத்தம்பி
பிஸ்காலுக்காக.

UNOFFICIAL ANNOUNCEMENTS.

தொழிலுக்குட்படாதவர்களின் அறிவித்தல்.

[I. Sinnatamby.]

மட்டக்களப்பு மண்முனைப்பற்றுக் காத்தான் குடியிருப்பில் வசிக்கும் இஸ்மாலெவ்வை சின்னத்தம்பி ஆகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் இதனடுத்த மூன்று மாசங்களின்பின் மண்முனைப்பற்றுக் காத்தான்குடியிருப்பில் தமிழ்பாஷையில் நொத்தாரிஸ் உத்தியோகம் நடத்துவதற்காய் ஏற்றுக்கொள்ளும்படி உத்தம தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பம்பண்ண எண்ணியிருக்கிறனென்பதை இத்தால் விஞ்ஞாபனஞ்செய்கிறேன்.

இ. சின்னத்தம்பி.

1906 ம் ஸு கார்த்திகைமீ 11 ந் தேதி.

[H. Jayasundera]

தெற்குப்பகுதி காலி நாவலவத்தைக்குள் சப்புகளையிலிருக்கும் அன்றி ஜயசுந்தர வென்ற நான் இன்று முதல் மூன்று மாசம் சென்றதின்பின் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் பதுளை டிஸ்திறிக்கில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிசு உத்தியோகத்துக்கு ஏற்படுத்தும்படி மேன்மை தங்கிய தேசாதிபதி அவர்களிடம் கேட்பதென்று இத்தால் அறியத்தருகிறேன்.

எச். ஜயசுந்தர.

1906 ம் ஆ நொவம்பர்மீ 26 ந் உ.

[D. D. Karunanayaka.]

கேகல்லை டிஸ்த்திறிக்கில் இப்போது கேகல்லையில் இருக்கும் தொன் டேவிட் கருநாநாயக்கவாகிய நான் 1877 ம் ஆண்டு 2 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின் பிரகாரம் பதுளை டிஸ்த்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தரிசுவாக வேலைபார்ப்பதற்கு நியமனம்செய்து உத்தரவுகொடுக்கும்படி அதிமேன்மை தங்கிய தேசாதிபதி அவர்களை வேண்டிக்கொள்கிறேனென்பதை இத்தால் அறியக்கொடுக்கின்றேன்.

தொ. டே. கருநாநாயக்க.

கேகல்லை, 1907 ம் ஸு அற்பசிமீ 16 ந் உ.

[K. S. Sivaguru.]

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி கதிரித்தம்பி சிவரத்தினம் சிவகுருவாகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின்படி மூன்று மாசங்களின்பின் யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் பிரசித்த நொத்தாரிசுவாகத் தமிழ்ப்பாஷையில் பணிவிடை நடத்திவர என்னை யேற்றுக்கொள்ளும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களிடம் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

க. சி. சிவகுரு.

உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்,
1906 ம் ஆ ஆடிமீ 28 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.